இலங்கை விஜயத்தின் பின்னர் வெளியிடப்படும் அறிக்கை, செப்டம்பர் 11, 2018

# அரசுகளின் வெளிநாட்டுக் கடன் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்டிக்கும் ஏனைய நிதிசார் கடப்பாடுகள் என்பன அனைத்து விதமான மனித உரிமைகளையும் - குறிப்பாக பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளையும் - முழுமையாக அனுபவிப்பதில் எடுத்து வரக்கூடிய தாக்கங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சுயாதீன நிபுணர் ஜுவான் பப்லோ போஹோஸ்லாவ்ஸ்கி அவர்கள் (2018 செப்டம்பர் 3ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரையில்) இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் தொடர்பான அறிக்கை

## கொழும்பு, இலங்கை, செப்டம்பர்,11, 2018

இன்று நான் இலங்கைக்கான எனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொள்கின்றேன். இவ்விஜயம் 2018 செப்டம்பர் 3ஆம் திகதி ஆரம்பமாகியது. இந்த விஜயத்தின் முன்னரும், இந்த விஜயத்தின் போதும் எனக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியமைக்காக இலங்கை அரசாங்கத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதன் மூலம் இதனை ஆரம்பிக்க விரும்புகின்றேன்.மேலும்,என்னுடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட அனைத்து தகவல்கள் தொடர்பாகவும், பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் மேற்கொள்ளப்பட்ட பெருந்தொகையான கருத்துப் பரிமாற்றங்கள் மற்றும் ஆழமான மீளாய்வுகள் என்பன தொடர்பாகவும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.இந்த விஜயத்தின் போது ஒழுங்குபடுத்தல் ரீதியான ஆதரவினை வழங்கியமைக்காக ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கை அணிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பொறிமுறைகளுடன், குறிப்பாக விசேட நடைமுறை அமைப்புக்களுடன், ஆக்கபூர்வமான விதத்தில் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வந்திருக்கும் விடயத்தைச் சுட்டிக்காட்டுவதற்கு நான் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன்.அண்மைய வருடங்களில் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் பல்வேறு விதமான பணிப்பாணைகளைக் கொண்டிருக்கும் எனது சகாக்கள் பெருந்தொகையானோர் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான வாய்ப்பினை பெற்றுக்கொண்டிருந்தார்கள் என்ற விடயத்தையும் இங்கு பாராட்டுதலுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

நாட்டில் இடம்பெற்று வரும் ஒரு சில சீர்த்திருத்தங்களை நேரடியாக பார்ப்பதற்கும், சமூக மற்றும் பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்டு வரும் முன்னேற்றம் மனித உரிமைகள் கண்ணோட்டத்தில் எவ்வாறு வலுவடைந்துள்ளது என்ற விடயத்தை பரீட்சித்துப் பார்ப்பதற்கும் இந்த விஜயம் எனக்கு ஒரு முக்கியமான வாய்ப்பினை வழங்கியது.இந்த விஜயத்தின் அனைத்துமடங்கிய ஒரு குறிக்கோள், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பவற்றை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட அண்மைக்கால பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகள் இலங்கை வாழ் அனைத்து மக்களினதும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை வென்றெடுக்கும் விடயத்தில் எவ்வாறு பங்களிப்புச் செய்துள்ளன என்ற விடயத்தை புரிந்து கொள்வதாகும்.

இந்த விஜயம் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட நான்கு குறிக்கோள்களை கொண்டிருந்தது: a) பொதுக்கடன், கட்டமைப்பு ரீதியான சீராக்கம், அரசிறை ஸ்திரநிலை மற்றும் ஏனைய பொருளாதார சீர்திருத்தக் கொள்கைகள் என்பன மனித உரிமைகளைச் சாதித்துக் கொள்ளும் விடயத்தில் எடுத்து வந்திருக்கும் தாக்கங்களை பரிசீலனை செய்தல் b) சட்ட விரோதமான நிதிப் பாய்ச்சல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் முயற்சிகளை மதிப்பிடுதல் c) மனித உரிமைகள் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் பொழுது சர்வதேச அபிவிருத்தி உதவி மற்றும் கடனளிப்பு என்பன இலங்கை தொடர்பாக எடுத்து வந்திருக்கும் தாக்கங்களைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் d) நிதித்துறையில் நுண் நிதி கடனளிப்பு விடயத்தில் மனித உரிமைகள் தர

நியமங்களை ஒருங்கிணைத்துக்கொள்வதற்கென அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் முயற்சிகளை ஆய்வு செய்தல்.

**பேரண்டப் பொருளியல், நிதி மற்றும் மனித உரிமைகள்**

கடன், வரவுசெலவுத்திட்டம் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை இணைக்கும் விடயம் எது என்பதனை எடுத்துக் காட்டுவதன் மூலம் நான் இதனை ஆரம்பிக்கின்றேன்.இலங்கை பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் குறித்த சர்வதேசச் சமவாயத்தை 1980 இல் அத்தாட்சிப்படுத்தியது.இச்சமவாயத்தின் கீழ், அரசுகள் தம்வசம் வைத்திருக்கும் உச்சமட்ட வளங்களின் பிரகாரம் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளைப் படிப்படியாக சாதித்துக் கொள்வதற்கு தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்கான கடப்பாட்டினை கொண்டுள்ளன. இந்த உரிமைகளைச் சாதித்துக் கொள்ளும் நிலை குறிப்பிட்ட அரசுக்கு கிடைக்கக்கூடிய வளங்களுடன் பிணைக்கப்பட்டிருக்கின்றது.அதாவது, பொது நிதி கையாளப்படும் வழிமுறைகள் சமூகநலச் செலவுகளுக்கு நிதிகளை ஒதுக்கும் விடயத்தில் ஒரு தாக்கத்தை கொண்டிருக்க முடியும்.அது உணவு, நீர், பொதுச் சுகாதாரம், போதியளவிலான வீடமைப்பு, சுகாதாரம், நீதியை அணுகுதல் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் அனைத்து விதமான மனித உரிமைகள் மீதும் தாக்கங்களை எடுத்துவர முடியும்.[1]

போரின் முடிவினை அடுத்தும், நல்லிணக்கச் செயன்முறை முன்னெடுக்கப்பட்டதை அடுத்தும் நாட்டிற்கு புதிய பொருளாதார வாய்ப்புக்கள் கிடைத்தன.வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கும், சமாதானம் மற்றும் ஜனநாயகம் என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளின் விளைவாக ஏனையவற்றுக்கு மத்தியில்இ மிகவும் முக்கியமான ஒரு பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டமும்இ பொருளாதார நடவடிக்கைகளும் அமுல் செய்யப்பட்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தினால் (IMF) பரிந்துரை செய்யப்பட்டவாறு அரசினால் தெரிவு செய்யப்பட்டிருந்த உத்தி, அரசிறை மற்றும் வெளித்துறைகள் என்பவற்றை பலப்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தைத் ஸ்திரப்படுத்துவதாகவே இருந்து வந்தது.அவர்களுடைய கருத்தின் பிரகாரம்இ வெளிநாட்டுக் கடன் சுமை இக்குறிக்கோளைச் சாதித்துக் கொள்வதற்கு உதவ முடியும். பிரமாண்டமான உள்கட்டமைப்பு கருத்திட்டங்களை நிதிப்படுத்தும் விடயத்திலும் இந்த உத்தி உள்ளடக்கப்பட்டிருந்தது.பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்வதுடன் இணைந்த விதத்தில் பிரமாண்டமான கருத்திட்டங்களை நிதிப்படுத்துதல், நிலைத்து நிற்கக்கூடிய வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான இயலுமையைப் பெற்றுக்கொடுக்கும் ஒரு சூழ்நிலையை உருவாக்க முடியுமென நம்பப்பட்டது.இலங்கையின் பொதுக்கடன் கடந்த வருடங்களின் போது கணிசமான அளவில் அதிகரித்திருப்பதற்கான காரணம் இதுவாகும்.2000 தொடக்கம் 2009 வரையில் வெளிநாட்டுக் கடன் இரட்டிப்பாகியதுடன், அதன் பின்னர் அது தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்துள்ளது.2017ஆம் ஆண்டின் முடிவில் இலங்கையின் வெளிநாட்டுக் கடன் 28.7 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்து வந்தது[2].மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கடன் விகிதம் 2009ஆம் ஆண்டில் 86.2 விகிதமாக இருந்து, 2017 ஆம் ஆண்டில் 77.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.ஆனால், கடனின் மிகவும் சுமைமிகுந்த உள்ளடக்கம் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியுள்ளது.

திட்டமிடப்பட்டிருந்தவாறு வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் ஏற்றுமதிகள் என்பன அதிகரிக்கவில்லை.உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியும் மிகவும் வலுவான விதத்தில் முடுக்கிவிடப்பட்டிருக்கவில்லை.வெளிநாட்டுக் கடன்களினால் நிதிப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தின் இலாப நோக்கற்ற துறைகளின் துரித அபிவிருத்தி காரணமாக 2010 - 2012 காலப் பிரிவின் போது துரித வளர்ச்சி ஏற்பட்டதுடன்இ அக்காலப்பிரிவில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8.5% வருடாந்த சராசரி விகிதத்தினால் விரிவடைந்தது.அதன் பின்னர் 2013 -2016 காலப் பிரிவில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி சராசரியாக 4.5% மட்டங்களில் வீழ்ச்சியடைந்திருந்தது. இக்கடன் வரலாறு வெளிநாட்டு கடன் நிலைமையை மிக மோசமாக பாதித்திருந்தது என்பது உண்மையாகும்.அக்கடன்கள் மூலம் நிதிப்படுத்தப்பட்ட ஒரு சில கருத்திட்டங்கள் நீண்ட கருக்கட்டல் காலப் பிரிவுகளைக் கொண்டிருந்தன. எவ்வாறிருப்பினும், கடன் சுமை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. இது தவிர வெள்ளப் பெருக்குகள், வறட்சி நிலைமைகள் போன்ற

இயற்கை அனர்த்த சம்பவங்களும் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியின் மீது தாக்கத்தை எடுத்து வந்திருந்தன. உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 2016ஆம் ஆண்டில் 4.5% ஆக இருந்துஇ 2017 இல் 3.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.2020 ஆம் ஆண்டளவில் 3.5% வளர்ச்சியை சாதித்துக்கொள்ளும் நோக்கத்துடன் அரசாங்கம் அரசிறை பற்றாக்குறையை குறைத்துக் கொள்வதற்கென மிகவும் கண்டிப்பான வழிமுறைகளை முன்னெடுத்துள்ளது.பேரண்டப் பொருளியல் உறுதிப்பாட்டினைப் பராமரித்து வருவதற்கென அரசாங்கத்தினால் கணிசமான அளவிலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இக்குறிக்கோளைச் சாதித்துக் கொள்ளும் பொருட்டு பரந்த வீச்சிலான சீர்த்திருத்தங்களும் அமுல் செய்யப்பட்டுள்ளன.அரசிறை உறுதிப்பாட்டு வழிமுறைகள் தவிர, சமூகப் பாதுகாப்பு வலை நிகழ்ச்சித்திட்டங்களிலும் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (2017 ஆம் ஆண்டு துவக்கிவைக்கப்பட்ட) இலங்கைக்கான தூர நோக்கு 2025 நிகழ்ச்சித்திட்டம் 2025 ஆம் ஆண்டு தொடர்பாக அறிவிக்கப்பட்டிருக்கும் தொடரான பல வழிமுறைகளை முன்வைக்கின்றது. காணி மற்றும் தொழில் சந்தையின் மீது தாக்கத்தை எடுத்துவரக்கூடிய ஒழுங்குவிதி தளர்ப்பு சீர்த்திருத்தங்களும் இதில் அடங்குகின்றன.

எனது கருத்தின் பிரகாரம் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினைப் பராமரித்து வருவது மிக முக்கியமான ஒரு கரிசனையாகயிருந்துவரும் அதே வேளையில், சர்வதேச மனித உரிமைகள் தர நியமங்களின் பிரகாரம் திட்டமிடப்பட்டிருக்கும் இச்சீர்த்திருத்தங்களில் மனித உரிமைகள் தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவதனை இந்த நோக்கம் தடுக்கக்கூடாது.

அமுல் செய்யப்பட்டிருக்கும் அல்லது அறிவிக்கப்பட்டிருக்கும் பொருளாதார சீர்த்திருத்தங்கள் மனித உரிமைகள் மீது எத்தகைய தாக்கங்களை எடுத்துவர முடியும் என்பது குறித்த ஒரு எதிர்வு கூறல் மதிப்பீட்டை அரசாங்கமோ அல்லது சர்வதேச நாணய நிதியமோ மேற்கொண்டிருக்கவில்லை. மனித உரிமைகள் கண்ணோட்டத்திலிருந்து நோக்கும் பொழுதுஇ இந்தச் செயற்பாடு அதியுயர் முக்கியம் வாய்ந்ததாக இருந்து வருகின்றது. உதாரணமாக, எரிபொருள் மானியங்கள் அல்லது சமூகப் பாதுகாப்பு அனுகூலங்கள் என்பவற்றின் மீதான வெட்டுக்களை நியாயப்படுத்தும் பொழுது அல்லது அரசாங்க சேவைகள் தொடர்பாக அல்லது அரசுக்கு சொந்தமான தொழில் நிறுவனங்கள் தொடர்பாக பெருமளவுக்கு இலாப நோக்கிலான ஒரு தர்க்கவியலைப் பிரயோகிக்கும் பொழுது இந்த மதிப்பீடு முக்கியத்துவம் பெறுகின்றது. அதே வேளையில், நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதை சகித்துக்கொள்வது பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை அனுபவிக்கும் விடயத்தில் அதே விதத்திலான பாதகமான தாக்கங்களை எடுத்துவர முடியும் என்பதனையும் இங்கு கூறாமல் இருக்க முடியாது.

விரிவாக்கப்பட்ட அமெரிக்க டொலர் 1.5 பில்லியன் நிதியளிப்பு வசதியின் கீழ் சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் நிதிப்படுத்தப்படும் மூன்று வருட நிகழ்ச்சித்திட்டத்தின் விளைவாக பெருந்தொகையான சீர்திருத்தங்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன. வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையை குறைத்துக்கொள்ளல், அரசாங்க வருவாயை உயர்த்துதல் மற்றும் வலுவான அரச நிதி முகாமைத்துவம் என்பவற்றை எடுத்துவரும் நோக்கத்துடன் கூடிய வழிமுறைகளையும் இது உள்ளடக்குகின்றது.

பணவீக்க விகிதம் மற்றும் அரசிறை ஒழுக்காறு என்பன தொடர்பாக நிர்ணயிக்கப்பட்டிருந்த ஒரு சில பேரண்டப் பொருளாதார இலக்குகள் சாதித்துக் கொள்ளப்பட்டுள்ளன. அதே வேளையில், மனித உரிமைகள் கண்ணோட்டத்தில் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒரு சில இடைவெளிகளும் இருந்து வருகின்றன. அரசிறை ஒழுக்காறு அமுல் செய்யப்பட்டு, சமூக சேவை செலவுகள் கணிசமான அளவில் குறைக்கப்பட்டிருக்கும் நிலையில் சமூகத்தில் ஏற்படக்கூடிய சீரழிவு நிலைமையைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு, குறிப்பாக சமூகச் செலவினங்களை அதிகரிக்க வேண்டிய ஒரு தேவை காணப்படுகின்றது.

மிக முக்கியமாக அண்மைக் காலத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட சீர்த்திருத்தங்களின் விளைவாக வலு மற்றும் பண்ணைத் தொழில்துறை என்பவற்றுக்கான மானியங்கள் குறைக்கப்பட்டிருப்பதுடன், எரிபொருள் விலை தானியங்கி முறையில் செயற்பட்டுவரும் சந்தையை அடிப்படையிலான ஒரு பொறிமுறையின் மூலம் தற்பொழுது நிர்ணயிக்கப்பட்டு வருகின்றது. அதே பொறிமுறையுடன் இணைந்த விதத்தில் மின்சாரத்தின் விலை தொடர்பாகவும் ஒழுங்கு விதித்

தளர்ப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. அத்தகைய வழிமுறைகள் கடற்றொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் கிராமிய சமூகங்களைச் சேர்ந்த குடும்பங்கள் ஆகிய தரப்புக்களின் வாழ்வாதாரங்களின் மீது எடுத்து வரக்கூடிய தாக்கம் குறித்து நான் கரிசனை கொண்டுள்ளேன். அத்தகைய வெட்டுக்கள் ஆகக்குறைந்தது தேவைகள் இருந்து வரும் சமூகப் பிரிவினரை இலக்காக் கொண்டு மேற்கொள்ளப்படும் காசு மாற்றல்களுக்கு ஊடாக இழப்பீடு செய்யப்படுதல் வேண்டும் என்பதும், அவை உரிய நேரத்தில் செயல்திறன் மிக்க விதத்தில் பயனாளிகளைச் சென்றடைவதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதும் எனது கருத்தாகும். கிராமிய பொருளாதாரத்தின் மீதான முதலீடுகள் இந்தச் சிறு அளவு உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரங்களுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் நெறிப்படுத்தப்படுதல் வேண்டும் (தொழில்நுட்ப மாற்றல், சந்தையை அணுகுதல், நிதி, பௌதிக மற்றும் இயற்கை வளங்கள் என்பவற்றை அணுகுதல்). அந்த நிலையில், தேவைகளைக் கொண்டிருக்கும் மக்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் மானிய வெட்டுக்களுக்கு எதிராக தாக்குப்பிடிக்கக்கூடிய நிலையில் இப்பிரிவினர் இருந்து வருவார்கள்.

இலங்கை வரலாற்று ரீதியாக பிராந்தியத்திலேயே மிக உயர்வான மானிட அபிவிருத்தி சுட்டெண் ஒன்றை கொண்டிருந்தது என்ற விடயத்தை என்னிடம் தமது கருத்துக்களைத் தெரிவித்த பலர் சுட்டிக்காட்டியிருந்தார்கள். வருமான ஏற்றத்தாழ்வை அளவிடும் கினி அளவீடு 1985 ஆம் ஆண்டில் 32.5 ஆக இருந்து வந்தது. ஆனால், அது முழு நாட்டையும் பொறுத்தவரையில் 2016ஆம் ஆண்டில் 39.8 ஆக உயர்ந்திருந்தது.

இன்றைய இலங்கையின் மானிட அபிவிருத்திச் சுட்டெண் மதிப்பு 0.766 ஆக இருந்து வருவதுடன், இது உலகிலுள்ள 188 நாடுகளில் இலங்கையை 73 ஆவது ஸ்தானத்தில் வைக்கின்றது. நாட்டின் குடித்தொகையில் 40 சதவீதத்தினர் வறுமைக் கோட்டிலும் பார்க்க இரண்டு மடங்கிற்கும் குறைந்தளவிலான மாத வருமானத்தைக் கொண்டவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள்[3]. தற்போதைய வறுமைக்கோடு மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவரின் வருமானம் ரூபா 4,166 (அமெரிக்க டொலர் 28.61) ஆகும்.மேலும், இது தொடர்பாக நகர, கிராம மற்றும் தோட்டக் குடித்தொகையினருக்கு மத்தியிலும் ஏற்றத்தாழ்வு காணப்படுகின்றது. கிராமப் பிரதேசங்களில் உயரளவிலான வறுமை விகிதங்கள் நிலவி வருகின்றன. நாட்டின் போ'ாக்கின்மை விகிதம் 2014- 2016[4] காலப் பிரிவின் போது 22.1% ஆக இருந்து வந்துள்ளது.

இது தவிரஇ நாட்டின் உழைக்கும் குடித்தொகையினரில் சுமார் மூன்றில் இரண்டு பங்கினர் முறைசாராத துறையில் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்[5]. நாடு 10 சதவீத தொழிற்சங்க அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. பலவீனமான தொழிற்சங்கங்கள் வருமான ஏற்றத்தாழ்வைத் தொடர்ந்து நிலைநிறுத்துவதுடன், ஊழியச் சந்தையின் கீழ் அரைப் பகுதியில் தொழிலாளர்களின் சம்பளத்தில் ஒரு தேக்க நிலையை ஏற்படுத்தக் கூடியவையாகும். மேலும், மீள் பகிர்வுக்கு பங்களிப்புச் செய்யும் தமது பாரம்பரிய பங்கினை நிறைவேற்றி வைப்பதற்கான தமது வலிமையையும் தொழிற்சங்கள் இழந்து வருகின்றன.[6] குடித்தொகையில் 20 சதவீதத்தினர் மட்டுமே ஓய்வூதியதிட்டங்களிலிருந்து[7] பயனடையக் கூடியவர்களாக இருந்து வருவதுடன், முறைசாராத துறையில் வேலை செய்து வருபவர்கள் சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கான உரிமையை அணுக முடியாதவர்களாக இருந்து வருகின்றனர்.

1940 களில் இலவச சுகாதார பராமரிப்பு மற்றும் இலசவக் கல்வி என்பவற்றை அறிமுகம் செய்திருக்கும் இலங்கை அரசு அடுத்து வந்த தசாப்தங்களின் போது மிக முக்கியமான அந்த சமூகக் கொள்கைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், பராமரித்து வருவதற்கும் குறிப்பான முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளது. எவ்வாறிருப்பினும், அத்தகைய வரலாற்று ரீதியான போக்குகளை (கடந்த வருடங்களின் போது இச்செலவுகளில் ஓர் அதிகரிப்பு போக்கு நிலவி வந்துள்ளது) பராமரித்து வருவதற்கான விருப்பத்திற்கு மத்தியிலும் கூட, 2017ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளைப் பொறுத்தவரையில் ஒரு சில வெட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன[8]. பொதுவான விதத்தில் அரசாங்கத்தின் மீள வரும் செலவினம் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 14.5%) – அந்த வருடங்களின் போது இடம்பெற்று வந்த போரின் தாக்கங்களைக் கவனத்தில் எடுக்கும் பொழுதும் கூட - சார்பு ரீதியில் ஏற்கனவே குறைந்த மட்டத்தில் இருந்து வருகிறது, அதாவது 2000 ஆண்டுகளின் தொடக்கத்தில் நிலவிய மட்டத்துடன் (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20% இற்கும் மேல்) ஒப்பிடும் பொழுது அல்லது

ஏனைய வளர்முக நாடுகளின் விகிதங்களுடன் ஒப்பிடும் பொழுது குறைவாக இருந்து வருகிறது.எனவே அதில் மேலும் வெட்டுக்கள் மேற்கொள்ளப்பட கூடாது.கல்விஇ சுகாதாரம் மற்றும் சமூக சேவைகள் என்பன தொடர்பான பொது செலவினங்களைக் குறைப்பதன் மூலம் அரசிறை சீராக்கத்தைச் சாதித்து கொள்வதற்கு முயற்சிப்பது உண்மையிலேயே நீண்ட கால அபிவிருத்திக்கு இடையுறு விளைவிக்க முடியும்.மேலும் அது நாட்டின் சமூக மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டின் மீது தாக்கங்களையும் எடுத்து வர முடியும்.

கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகள் தொடர்பான செலவினங்கள் 2018ஆம் ஆண்டில் அதிகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருப்பதனை நான் வரவேற்கின்றேன்[9]. எனினும், சமூக நலச் செலவினங்கள் கடந்த காலத்தில் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்ற விடயம் எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. சுகாதாரம், கல்வி போன்ற மிக முக்கியமான சமூகத்துறைகளில் பொதுத்துறை / தனியார் துறை கூட்டுச் செயற்பாடுகளை உருவாக்கும் அதன் நோக்கத்தை அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ளது. பொதுத்துறைஇ தனியார் துறை கூட்டுச் செயற்பாடுகள் குறித்த இந்த முயற்சிகள் அனைவருக்கு மத்தியிலும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளைச் சமத்துவமான விதத்தில் உறுதிப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முதன்மையான கடப்பாட்டினையும், கிடைக்கும் ஆகக்கூடிய வளங்களை ஒதுக்க வேண்டிய அதன் கடப்பாட்டினையும் பதிலீடு செய்ய முடியாது.

பாரியளவில் வளங்கள் திரட்டப்பட வேண்டிய தேவை தொடர்பாக ஒரு கருத்தொற்றுமை நிலவி வருகின்றது. அரசாங்கம் அதன் வரி அடித்தளத்தை விரிவாக்குவதற்கான வழிமுறைகளை முன்னெடுத்துள்ளது. எனினும், உயரளவிலான அரசிறை பற்றாக்குறை நிலவி வருவதுடன், வரையறுக்கப்பட்ட ஒதுக்குகள் காரணமாக பொது நிதிகள் பாதிப்படைந்துள்ளன. வரி சேகரிப்பு முறையை எளிமைப்படுத்தி, வரி அடித்தளத்தை விரிவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்யும் 2017ஆம் ஆண்டின் உள்நாட்டு இறைவரிச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கும் விடயத்தை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.அதே போல வரி விதிவிலக்குகள் தொடர்பாக தற்போது நிலவிவரும் தற்றுணிபு அதிகாரத்தைக் கையாள்வதற்கென அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் முயற்சிகளையும் நான் அங்கீகரிக்கின்றேன். எவ்வாறிருப்பினும், வருமான வரி மற்றும் செல்வ வரி என்பன நாட்டில் காணப்படும் சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் அதே வேளையில், அவை வினைத்திறன் மிக்க விதத்திலும், போதியளவிலும் வருவாய்களை உறுதிப்படுத்துவதற்கென மேலும் வழிமுறைகள் தேவைப்படுகின்றன என்பது எனது கருத்தாகும்.

வற்வரி விகிதம் கணிசமான அளவில் உயர்த்தப்பட்டிருக்கும் விடயம் குறித்து நான் கரிசனை கொண்டுள்ளேன். அது 11 சதவீதத்திலிருந்து 2016 இல் 15 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. ஏனெனில்இ குடித்தொகையின் வறிய பிரிவினரே இச்சுமையை ஏற்க வேண்டியுள்ளது. உண்மையிலேயே வற்வரிக்கு ஊடான வருவாய் சேகரிப்பில் 2017ஆம் ஆண்டில் 56.5 சதவீதமான தீவிர அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

தற்போதைய அரசாங்க வரவுசெலவுத்திட்டத்தை நாங்கள் நோக்கும் பொழுது, கடன்களை திருப்பிச் செலுத்தும் கொடுப்பனவு நாட்டின் மிக முக்கியமான செலவினமாக இருந்து வருவதனையும், பெறப்படும் கடன்களில் கணிசமான ஒரு தொகை தற்பொழுது இந்நோக்கத்திற்கென ஒதுக்கப்பட்டு வருவதனையும் நாங்கள் பார்க்கிறோம்[10]. இலங்கை 2012ஆம் ஆண்டில் ஒரு நடுத்தர வருமான நாடு என்ற அந்தஸ்தை எட்டியதுடன் இணைந்த விதத்தில் சலுகை ரீதியான நிபந்தனைகள் அற்ற வெளிநாட்டுக் கடனின் பங்கில் ஓர் அதிகரிப்பு அவதானிப்பட்டதுடன், அது 2006 ஆம் ஆண்டில் 7 சதவீதமாக இருந்து வந்த அக்கடன்கள் 2012ஆம் ஆண்டில் 50 சதவீதமாக அதிகரித்திருந்தன[11]. அக்கடன்கள் உயர் வட்டி வீதங்களைக் கொண்டவையாகவும், குறுகிய கடன் முதிர்ச்சிக் காலகட்டங்களைக் கொண்டவையாகவும் இருந்துவரும் பின்னணியில், கடன்களைத் திருப்பிச் செலுத்தும் செயற்பாட்டில் மிக முக்கியமான ஒரு தாக்கத்தை எடுத்து வருகின்றன. அது தவிர, ஒதுக்குகள் மிதமான மட்டங்களில் நிலவி வந்தன. கடன்கள் தொடர்பாக நாடு எதிர்கொண்டுவரும் பலவீனமான நிலைமைகளை மிகத் தீவிரமான கவனத்துடன் முகாமைத்துவம் செய்ய வேண்டிய தேவையிருந்து வருகின்றது.

இது தொடர்பாக அரசாங்கத்தினாலும், சர்வதேச நிதி நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்படும் கடனின் நிலைத்து நிற்கக்கூடிய தன்மை தொடர்பான பகுப்பாய்வுகள், மனித உரிமைகள்[12] நிலைத்து நிற்கும் தன்மையின் சமூக மற்றும் சுற்றாடல் பரிமாணங்கள் என்பவற்றை உள்ளடக்கும் விதத்தில் மிகவும் விரிவான ஒரு புரிந்துணர்வுடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென நான் பரிந்துரை செய்கின்றேன்[13]. கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் பொதுக்கடன் தொடர்பான கணக்காய்வை மேற்கொள்வதற்கான தொழில்நுட்ப தர நியமங்களை தன்வசம் வைத்துள்ளது. இத்தரநியமங்கள் பொறுப்புமிக்க அரச கடனளிப்பு மற்றும் கடன் எடுத்தல் தொடர்பான வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐ நா மாநாட்டு அமைப்பின் கோட்பாடுகளை (UNCTAD) அடிப்படையாகக் கொண்ட உயர் மட்ட கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச அமைப்பினால் (INTOSAI) உருவாக்கப்பட்டுள்ளன.

குறைந்தளவிலான பாதிப்புகளைக் கொண்ட கொள்கைத் தெரிவுகள் கிடைப்பதாக இருந்து வந்தால்[14] அதிகரித்து வரும் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கென சமூக நலச் செலவினங்களில் வெட்டுக்கள் மேற்கொள்ளப்படக் கூடாது. பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படக் கூடிய ஆகக்குறைந்தது மூன்று -ஒன்றுக்கொன்று குறைநிரப்பு செய்யக்கூடிய – தெரிவுகள் இருந்து வருகின்றன. முதலாவதாக, உள்நாட்டுக் கேள்வியைத் தூண்டச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். படிப்படியாக மேற்கொள்ளப்படும் வரிச் சீர்த்திருத்தங்கள், சமூகப் பயன்களை விரிவாக்குதல் மற்றும் குறைந்தபட்ச வேதனங்களை அதிகரித்தல் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் பல்வேறு வழிமுறைகளுக்கு ஊடாக இவ்வாறு கேள்வியை தூண்ட முடியும். அதன் விளைவாக உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் விருத்தி நிலைமை அரசிறை வருவாய்களை உயர்த்த முடியும். இராணுவத்திற்கான செலவு ஒதுக்கு, அண்மைய வருடங்களில் குறிப்பாக சமாதானம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகிய துறைகளில் நாடு எதிர்கொண்டிருக்கும் அடிப்படை மாற்றங்களைப் பிரதிபலித்து வருகின்றதா என்ற விடயம் தொடர்பாக ஒரு கலந்துரையாடலை ஆரம்பித்து வைத்தல் இரண்டாவது தெரிவாகும். மூன்றாவதாக, உள்நாட்டுக் கேள்வியைத் தூண்டுவதற்கும், எவரும் புறமொதுக்கப்படாததனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கென வருவாய்களை உருவாக்கிக் கொள்வதற்கும் அரசிறை வெளியை விரிவாக்கும் பொருட்டு கடனீந்தவர்களுடன் கடன்கள் தொடர்பான மீள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதாகும். அரசிறை, நாணய, பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகள் முழுமையாக ஒரே சீரானவையாக இருந்து வருதல் அவசியமாகும்.

## ஊழல், சட்ட விரோதமான நிதிப் பாய்ச்சல்கள் மற்றும் மனித உரிமைகள்

ஊழல்,மனித உரிமைகளுடன் சம்பந்தப்பட்ட ஒரு விடயமாக இருந்து வருகின்றது. ஏனெனில், அது அரச வரவுசெலவுத்திட்டத்தில் கணிசமான ஒரு பகுதியை அதன் சமூக செயற்பாடுகளிலிருந்து பிரித்தெடுக்கின்றது. இதன் காரணமாகவே சட்ட விரோதமான நிதிப் பாய்ச்சல்கள் மற்றும் குறைந்த மட்டங்களிலான பொருளாதார அபிவிருத்தி என்பவற்றுக்கு இடையிலான ஒரு வலுவான இடைத்தொடர்பு நிலவி வருவதனை அனுபவ அடிப்படையிலான ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன இது ஆச்சரியப்படத்தக்க ஒரு விடயமாக இருந்து வரவில்லை. நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக் குறிக்கோள் (SDG) 16.6 ஊழலை குறைப்பதை நோக்கமாக கொண்டிருப்பதுடன், குறிக்கோள் 16.4 2030ஆம் ஆண்டளவில் சட்டவிரோதமான நிதிப் பாய்ச்சல்களைக் கணிசமான அளவில் குறைத்துக் கொள்ள வேண்டுமென அரசுகளிடம் கேட்டுக்கொள்கின்றது.

ஊழலை தடுத்து நிறுத்தி, அதற்கு எதிராக போராடும் விடயத்தில் குறிப்பாக இலஞ்சம் மற்றும் ஊழல் என்பவற்றுடன் தொடர்புபட்ட சம்பவங்களைக் கையாள்வதற்கென இவ்வாண்டு மே மாதத்தில் விசேட நீதிமன்றங்களை அமைத்தமைக்காக நான் அரசாங்கத்தையும், பாராளுமன்றத்தையும் பாராட்டுகின்றேன். பல வருட காலமாக தேங்கிக் கிடக்கும் வழக்குகளைத் துரிதப்படுத்தும் பொருட்டு இந்த நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் உறுப்பினர்கள் தகுதியின் அடிப்படையில் நியமனம் செய்யப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதும், அவர்களுடைய முழுப் பதவிக் காலத்தின் போதும் உறுதிப்பாட்டை அனுபவித்து, சுயாதீனமாக செயற்படுவதனை உறுதிப்படுத்திக்

கொள்வதும் அதே அளவில் முக்கியமானதாகும். மேலும், அந்த நீதிமன்றங்கள் நிதிசார் ரீதியில் சுயாதீனமாக இருந்து வருவதனையும், அரசியல் அழுத்தம் அல்லாத தலையீடு என்பவற்றுக்கு உள்ளாக்கப்படாதிருப்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

வரி ஏய்ப்பு, கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குதல் மற்றும் ஊழல் என்பவற்றை உள்ளடக்கிய பரந்த வீச்சிலான கூறுகளை சட்டவிரோதமான நிதிப்பாய்ச்சல்கள் உள்ளடக்குகின்றன. அத்தகைய பணப்பாய்ச்சல்கள் மனித உரிமைகள் மீது எடுத்து வரக்கூடிய எதிர்மறைத் தாக்கம் பல்வேறு வழிகளில் இடம்பெற முடியும். பொது நிதி மற்றும் வளங்கள் சீர்குலைவடைதல் மனித உரிமைகள் மீது பாரியளவிலான தாக்கங்களை எடுத்து வரும் முக்கியமான ஒரு பாதிப்பாக இருந்து வருகின்றது என இங்கு குறிப்பிட முடியும்[15].

அத்தகைய தாக்கங்களை மதிப்பிட்டுக் கொள்வதற்கும், போதியளவிலான கொள்கைகளை அமுல் செய்வதற்கும் சட்ட விரோதமான நிதிப்பாய்ச்சல்கள் தொடர்பான மதிப்பீடுகள் அவசியமாகும். எனினும், இலங்கையில் அத்தகைய சட்டவிரோதமான நிதிகளின் வெளிப்பாய்ச்சல்கள் அல்லது உட்பாய்ச்சல்கள் என்பன தொடர்பாக இதுவரையில் எந்தவொரு ஆய்வோ அல்லது உத்தியோகபூர்வமான மதிப்பீடோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்ற விடயத்தை நான் எனது விஜயத்தின் போது தெரிந்து கொண்டேன். இது ஒரு சிக்கலான பணியாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில் (திட்டமிட்டவிதத்தில் நிழல் உலகில் சுற்றுக்கு விடப்படும் நிதிப் பாய்ச்சல்களை மதிப்பிடுவதுடன் இது சம்பந்தப்பட்டுள்ளது) நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக் குறிக்கோள்களுடன் இணைந்த விதத்தில் சட்ட விரோதமான நிதிப் பாய்ச்சல்கள் இனிமேலும் இடம்பெறுவதனை தடுத்து நிறுத்தும் பொருட்டு இத்தகைய ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என நான் அரசாங்கத்திடம் வலிந்து கேட்டுக்கொள்கிறேன்.

உலகின் சட்டவிரோதமான நிதிப் பாய்ச்சல்களில் பெரும்பாலானவை தேச எல்லைகளுக்கு அப்பால் இடம்பெற்றுவரும் வரி சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களாக இருந்து வருகின்றன என்ற விடயம் மதிப்பிடப்பட்டுள்ளது[16]. இந்த நிதிப் பாய்ச்சல்கள் பெருமளவுக்கு வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் என்பவற்றுக்கு ஊடாக சுற்றுக்கு விடப்படுகின்றன. (தேசிய அல்லது சர்வதேசிய) *உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள்* என்ற கோட்பாட்டின் அடிப்படையில் சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்களை உரிய சட்டரீதியான அமைப்புக்களிடம் அறிக்கையிட வேண்டிய கடமையை இலங்கையில் செயற்பட்டுவரும் வங்கிகள் கொண்டுள்ளன. இலங்கையில் வரி ஏய்ப்பு ஒரு நிதிக்குற்றச் செயலாகக் கருதப்படாதிருப்பதன் காரணமாக - அது கறுப்புப் பணத்தை சட்டரீதியான வழிமுறைக்குள் எடுத்துவருவதற்கான ஒரு அடிப்படையாக இருக்கமுடியாது.எனவே தமது வாடிக்கையாளர்களின் வரி ஏய்ப்புடன் சம்பந்தப்படக்கூடிய சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அறிக்கையிட வேண்டிய கடமையை வங்கிகள் கொண்டிருக்கவில்லை. இந்த சட்ட ரீதியான இடைவெளியை மூடி விடுமாறும், வரி சேகரிப்பினை விருத்தி செய்து கொள்வதற்கு வங்கிகளிடமிருந்து உதவியை நாடுமாறும் நான் இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றேன்.

**கருத்திட்ட நிதிப்படுத்தல் மற்றும் சர்வதேச அபிவிருத்தி உதவி**

2009 ஆம் ஆண்டில் போர் முடிவடைந்ததனை அடுத்து நாடெங்கிலும் பாரியளவிலான உட்கட்டமைப்புக் கருத்திட்டங்கள் பரவலாக அமுல் செய்யப்பட்டன. கொழும்பு வெளிச்சுற்று அதிவேக பாதை, சாம்பூர் மின்சார நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் அம்பாந்தோட்டை விமான நிலையம் என்பன இதற்கான ஒரு சில உதாரணங்களாகும். இந்தக் கருத்திட்டங்கள் அனைத்தும் 2000 ஆம் ஆண்டின் முதலாவது தசாப்தத்தின் பிற்பகுதியில் /2010 இன் ஆரம்பத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, துவக்கி வைக்கப்பட்டன. இன்றைய நிலையில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பான், கொரியா, இந்தியா மற்றும் சீனா ஆகிய தரப்புக்கள் இலங்கைக்கு வழங்கியிருக்கும் கருத்திட்டக் கடன்கள் மட்டும் மொத்தம் 19.3 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அல்லது அரசு எடுத்திருக்கும் மொத்தக் கடன்களின் 48 சதவீமாக இருந்து வருகின்றன.

அனைவரையும் உள்ளடக்கிய அபிவிருத்தியை பலப்படுத்துவதற்கும், ஏற்றத்தாழ்வுகளைக் கவனத்தில் எடுப்பதற்கும், அதே போல மனித உரிமைகள் மீது அவை எடுத்து வரக்கூடிய மோசமான விளைவுகளைத் தவிர்த்துக்கொள்வதற்கும் நாடு இக்கருத்திட்டங்களை உரிய விதத்தில் பயன்படுத்திக் கொண்டுள்ளதா என்ற விடயம் குறித்து எனது விஜயத்தின் போது கரிசனைகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இங்கு நான் ஓர் உதாரணத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். 2010 இலிருந்து அமுல் செய்யப்பட்டுவரும் ஒரு கருத்திட்டமான நகர புத்துயிர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் கொழும்பு மாநகரை "உலக அங்கீகாரம் பெற்ற ஒரு நகராக"[17] நிலைமாற்றம் செய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. அந்த நிலையில், முறைசாராத குடியிருப்புக்களிலும், அதனை ஒத்த பிரதேசங்களிலும் வசித்துவரும் 50,000 இற்கு மேற்பட்ட குடும்பங்களை 2010-2014 காலப் பிரிவின் போது புதிய வீடமைப்புத் திட்டங்களுக்கு மாற்றுவதனை இந்நிகழ்ச்சித்திட்டம் நோக்கமாக கொண்டுள்ளது.

உரிய நடைமுறை பின்பற்றப்படாத விதத்தில் கொழும்பில் வசித்து வரும் உள்ளூர் குடித்தொகையினர் வெளியேற்றப்பட்ட விடயம் தொடர்பான தகவல்களை வீடமைப்பு தொடர்பான விசேட அறிக்கையாளர் 2014ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் கவனத்திற்கு எடுத்து வந்திருந்தார். அச்சந்தர்ப்பத்தில் பலவந்தமான வெளியேற்றங்கள் இடம்பெற்று வந்துள்ளன என்ற விடயத்தை விசேட அறிக்கையாளர் சுட்டிக்காட்டியிருந்தார். ஏற்கனவே வெளியேற்றப்பட்டிருந்த பல குடும்பங்களுக்கு போதியளவிலான நட்டஈடுகள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், தொடக்கத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களுக்கு மாற்று வீட்டு வசதிகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை. மக்களின் விருப்பத்திற்கு மாறான விதத்திலான காணிக் குடியேற்றக் கொள்கையை அமுல் செய்யும் விடயத்தில் பல்வேறு குறைபாடுகள் நிலவி வந்திருப்பதனை ஓர் அண்மைக் கால ஆய்வு எடுத்துக் காட்டியுள்ளது. அமுலாக்கங்களின் ஆரம்ப கட்டங்களின் போது சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் அனைத்து தேசிய மொழிகளிலும் கிடைக்காதிருந்தமை, வெளியேற்றம் மற்றும் மீள்குடியேற்றம் என்பவற்றின் விளைவாக தமது வீடுகளை இழந்த மக்களுக்கு வழங்கப்படும் நட்டஈடு தொடர்பான பிரச்சினைகள் என்பனவும் இதில் அடங்குகின்றன[18].

மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய விதத்திலான பொருளாதார வளர்ச்சி என்பன ஒன்றுக்கொன்று முரண்பட்டவையல்ல. ஆனால், அதற்கு மாறான விதத்தில் அவை ஒன்றையொன்று வலுவூட்ட முடியும். சர்வதேச மனித உரிமைகள் கருவிகளின் பொருளாதார முக்கியத்துவம் நிர்ணயகரமானதாகும்: அவை வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் மேலதிக அனுகூலங்களை உள்நாட்டில் பயன்படுத்திக் கொள்வதற்கும், கருத்திட்டங்களின் சாதகமான அம்சங்கள் ஒட்டுமொத்த குடிமக்களுக்கும் உண்மையிலேயே பயனளிப்பதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்கும், மனித உரிமைகள் மீது அவை எடுத்து வரக்கூடிய பாதமான தாக்கங்களைத் தடுப்பதற்கு மற்றும் /அல்லது குறைத்துக் கொள்வதற்கும் உதவுகின்றன. அது மறுபுறத்தில் கருத்திட்டங்களின் சுற்றாடல் சார்ந்து மற்றும் சமூகம் சார்ந்து நிலைத்து நிற்கக்கூடிய தன்மையை உறுதிப்படுத்துகின்றது.

மக்கள் நலனை கருத்தில் கொண்டு மனித உரிமைகளை மதிக்கும் உள்கட்டமைப்புக் கருத்திட்டங்கள் மட்டும் முன்னெடுக்கப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கென இலங்கையின் சட்டத்தில் ஏற்பாடுகள் உள்ளனவா?

2001 ஆம் ஆண்டின் தேசிய சுயவிருப்புக்கு மாறான மீள்குடியேற்றக் கொள்கை[19] பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் கலந்தாலோசனைகளை நடத்துதல் மற்றும் அவர்களுக்கு நட்டஈடுகளை வழங்குதல் என்பன தொடர்பான ஒரு சில ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது என்ற விடயம் எனது கவனத்திற்கு எடுத்து வரப்பட்டிருந்தது. மேலும், இலங்கை (1988ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு ஊடாக கருத்திட்டங்களின் சுற்றாடல் தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்கான வழிமுறைகளையும் உருவாக்கியுள்ளது. எவ்வாறிருப்பினும், பொதுமக்களுடன் கலந்தாலோசனை நடத்தும் கால அளவு, அமைவிடம் மற்றும் மொழி காரணமாக அந்த ஆவணத்தை அணுகமுடியாத நிலை மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுக்கு பின்னர் போதியளவில் கண்காணிப்பு இடம்பெறாமை

போன்ற ஒரு சில குறைபாடுகள் இருந்து வருகின்றன[20]. உமாஓயா மற்றும் துறைமுக நகரம் போன்ற கருத்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சமூக மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் குறித்த மனக்குறைகள் இந்தச் செயன்முறைகளின் சட்டபூர்வத் தன்மை குறித்த கேள்விகளை எழுப்புகின்றன. சுயவிருப்புக்கு மாறான காணி மீள்குடியேற்றக் கொள்கை இன்னும் ஒரு கொள்கையாக மட்டுமே இருந்து வருவதுடன், ஒரு சட்ட ரீதியான சட்டகமாக இருந்து வரவில்லை. மேலும், அது தற்போதைய பிரமாண்டமான உள்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களில் மிக அரிதாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது (உதாரணம்: உமாஓயா பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டம், துறைமுக நகர கருத்திட்டம்).

இலங்கையின் சட்டத் தொகுப்பு, உள்கட்டமைப்பு கருத்திட்டங்கள் தொடர்பான அனைத்துமடங்கிய மற்றும் விரிவான ஒரு மனித உரிமைகள் தாக்க மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கடப்பாட்டினை உள்ளடக்கியிருக்கவில்லை. தற்போதைய மனித உரிமைகள் தரநியமங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த விடயம் தொடர்பாக மிகவும் வலுவான ஒரு சட்டவாக்கத்தை நிறைவேற்றுவதன் மூலம் இந்த இடைவெளியை நிரப்ப வேண்டுமென நான் இலங்கை அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குகின்றேன்[21]. வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல், பாதிப்புகளை எதிர்கொள்ளக் கூடிய மக்களுடன் கலந்தாலோசனை நடத்தி, அவர்களுடைய பங்கேற்பைப் பெற்றுக்கொள்ளல் என்பன அத்தியாவசியமானவையாகும். செயன்முறையின் இந்த நடைமுறை சார்ந்த அம்சங்களும் ஸ்தாபிக்கப்பட்டு, சட்டத்தின் மூலம் அவை உரிய விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

தகவலறியும் உரிமையை உள்வாங்குவதற்கென அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 19ஆவது திருத்தத்தை நான் பாராட்டுகின்றேன். இது தொடர்பாக உள்கட்டமைப்பு வசதிகளின் பின்னணியில் தகவல்களை அறிவதன் முக்கியத்துவத்தை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புவதுடன், 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவலறியும் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் விடயத்தை நான் வரவேற்கின்றேன்.

கொழும்பில் நான் சந்தித்த அனைத்து சர்வதேச கடனளிப்பு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும், நன்கொடை வழங்குநர்களும் தாம் நெறிப்படுத்தும் கருத்திட்டங்களின் சுற்றாடல் மற்றும் மனித உரிமை சார்ந்த தாக்கங்கள் குறித்து கரிசனைகளை வெளிப்படுத்தினார்கள். எவ்வாறிருப்பினும், அவர்கள் எவரும் மனித உரிமைகள் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கான ஒரு சட்டகத்தை தம்வசம் கொண்டிருக்கவில்லை. கருத்திட்டங்கள் குறித்த இறுதித் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முன்னர் நடத்தப்பட்ட ‘‘சமூக’’ மற்றும் ‘‘பால்நிலை’’ தாக்க மதிப்பீடுகள் குறித்து ஒரு சிலர் குறிப்பிட்டார்கள். ஆனால், அக்கருத்திட்டங்கள் எந்த சட்ட தரநியமங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டன என்ற விடயம், தெளிவானதாக இருந்து வரவில்லை. மேலும், இந்த மதிப்பீடுகளின் பெறுபேறுகள் பகிரங்கமாக கிடைக்கவில்லை. எனவே, முதன்மையான உரிமைகள் மற்றும் நடைமுறை சார்ந்த உரிமைகள் ஆகிய இருவகையான உரிமைகளையும் உள்ளடக்கும் விதத்தில் கருத்திட்டங்களின் மனித உரிமைகள் தொடர்பான தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்கென மேலும் வலுவான சட்டகங்களை ஸ்தாபித்துக் கொள்ளவேண்டுமென சர்வதேச நிதிசார் பாங்களர்களுக்கு நான் ஆலோசனை வழங்குகின்றேன்.

**நுண் நிதி கடனளிப்பு மற்றும் மனித உரிமைகள்**

நுண் நிதி கடனளிப்பு இங்கையில் நீண்ட ஒரு வரலாற்றைக் கொண்டுள்ளது. அது பல தசாப்த காலமாக நாட்டில் செயற்பட்டு வருகின்றது. கடன் வாங்குபவர்கள் தமது வாழ்வாதாரங்களை உருவாக்கிக் கொள்வதன் மூலம் உண்மையிலேயே பெருந்தொகையான மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுப்பதற்கு அது உதவியுள்ளது. எவ்வாறிருப்பினும், நாட்டில் நான் அவதானித்த கடன் வழங்குபவர்களின் தரப்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த துஷ்பிரயோகங்களின் எண்ணிக்கை, நிகழ்தகவு மற்றும் பாரதூரமான இயல்பு என்பன உடனடியான அரச செயற்பாட்டை அவசியப்படுத்துகின்றன.

இந்த நுண் நிதி நிறுவனங்களிலிருந்து கடன்களைப் பெறுபவர்கள் பரந்த வீச்சில் இருந்து வருவதுடன், வறிய மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள் குறிப்பாக நுண்நிதி நிறுவனங்களினால் இலக்காகக் கொள்ளப்படுகிறார்கள் என்ற விடயத்தையும் நான் அறிந்து கொண்டுள்ளேன். இந்நிறுவனங்கள் தாம் வழங்கும் கடன்களுக்கு 220 சதவீதம் வரையிலான வட்டி விகிதங்களை அறவிடுவதுடன், கூட்டு வட்டி விகிதங்களையும் அறவிட்டு வருகின்றன. இந்தப் பின்புலத்தில், பெண்களுக்கு எதிரான பாரபட்சத்தை இல்லாதொழிப்பதற்கான சமவாயத்தை இலங்கை 1981ஆம் ஆண்டில் அத்தாட்சிப்படுத்தியுள்ளது என்ற விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இச்சமவாயம் பொருளாதாரத்திலும் சமூக வாழ்க்கையிலும் பெண்களுக்கு எதிராக இடம்பெற்று வரும் பாரபட்சத்தை இல்லாதொழிப்பதற்கான கடப்பாட்டினை எடுத்து வருகின்றது (உறுப்புரை, 13).

இக்கடன்கள் எடுத்து வரக்கூடிய கடன் இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்கென கடனளிப்பு நிறுவனங்கள் குறிப்பாக எத்தகைய வழிகாட்டுதல்களையும் பின்பாற்றாதிருந்து வருவதன் காரணத்தினாலும், கடும் வட்டி விகிதங்கள் அறவிடப்படும் காரணத்தினாலும் நாட்டில் வாழ்ந்துவரும் பெண்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருந்து வருவதுடன், சுரண்டல் இயல்பிலான நிதி அமைப்பு ஒன்றின் பொறிக்குள் அகப்பட்டுக் கொண்டுள்ளார்கள்.

பாரியளவிலான இலாபங்களை ஈட்டும் நோக்கத்துடனும், வறிய கடன் எடுப்பவர்களின் தோள்களின் மீது – குறிப்பாக பெண்களின் தோள்களின் மீது – கடும் சுமைகளைச் சுமத்தும் நோக்கத்துடனும் இந்தப் பொறிமுறை வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு சில பெண்கள் தமது வியாபார முயற்சிகளைக் கட்டியெழுப்புவதற்கென இக்கடன்களைப் பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால், பெரும்பாலானவர்களினால் அந்த முயற்சியில் வெற்றியீட்ட முடிவதில்லை. நுண் மற்றும் சிறிய தொழில் முயற்சிகளைப் பொறுத்தவரையில் (மிதமிஞ்சிய வட்டி விகிதங்கள் போன்ற) அவற்றுக்கு ஒரு இயலுமையைப் பெற்றுக்கொடுக்கும் சூழ்நிலை இல்லாத பின்னணியிலும்,மிதமான பொருளாதார வளர்ச்சி இடம்பெற்றுவரும் பின்னணியிலும் இது வியப்பூட்டக் கூடிய ஒரு விடயம் அல்ல. ஏனைய பெண்கள் தமதும், தமது குடும்பத்தினதும் அடிப்படை நுகர்வுத் தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்கென இக்கடன்களைப் பெற்றுக்கொள்கிறார்கள். வேறும் சிலர் தமது கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கென கடன்படுகின்றனர். இப்பெண்கள் ஒரே நேரத்தில் பல்வேறு கடனளிப்பு நிறுவனங்களுக்கு 3 அல்லது 4 கடன்களைச் செலுத்த வேண்டிய நிலையில் இருந்து வருவது பொதுவான ஒரு நிலைமையாகும்.

கடன் தொகைகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கென கடன் சேகரிப்பாளர்கள் இப்பெண்களின் வீடுகளுக்கு - சில சந்தர்ப்பங்களில் நாளாந்த அடிப்படையில் - செல்கிறார்கள். தவணைக் கட்டணங்கள் செலுத்தப்படும் வரையில் சேகரிப்பாளர்கள் கடன் எடுத்தவர்களின் வீடுகளில் நீண்ட நேரம் தங்கியிருக்க முடியும். ஒரு சில சந்தர்ப்பங்களில் இந்தக் கடன் சேகரிப்பாளர்களிடமிருந்து உளவியல் ரீதியான மற்றும் உடல் ரீதியான வன்முறையை எதிர்கொள்ளக்கூடிய அபாய நிலையில பெண்கள் இருந்து வருகின்றார்கள். ஒரு சில விடயங்களில் கடன் தவணைக் கட்டணங்களுக்கு பதிலாக ‘‘பாலியல் சலுகைகளை’’ பரிமாறிக்கொள்ளுமாறு இக் கடன் சேகரிப்பாளர்களினால் பெண்கள் நிர்ப்பந்திக்கப்பட்ட சம்பவங்கள் எனது கவனத்திற்கு எடுத்து வரப்பட்டிருந்தன[22]. கடன்களை திருப்பிச் செலுத்தும் பொருட்டு தமது சிறுநீரகங்களை விற்பனை செய்வதற்கு முயற்சி செய்த கடன் எடுப்பவர்கள் தொடர்பான சம்பவங்களையும் நான் தெரிந்து கொண்டுள்ளேன். ஒரு சிலர் தமது கிராமங்களை விட்டு வெளியேறுவதுடன், ‘‘ஒப்பந்த மீறலுக்கான’’ ஒரு தண்டனையாக வீட்டு வன்முறையையும் எதிர்கொள்கின்றார்கள் அல்லது கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு தேவையான பணத்தொகைகளை ஈட்டிக் கொள்வதற்காக மிகவும் கடினமாக, நீண்ட மணித்தியாலங்கள் உழைக்க வேண்டியிருக்கின்றது. கடன் எடுத்தவர்கள் தற்கொலை செய்து கொண்ட சம்பவங்கள் இந்த துஷ்பிரயோகத்துடன் கூடிய நுண்நிதிக் கடனளிப்பு முறையுடன் சம்பந்தப்பட்டுள்ளன.

பொது மக்களிடமிருந்து வைப்புக்களைப் பெற்று, அவற்றை முகாமைத்துவம் செய்துவரும் நிதி நிறுவனங்களை மட்டுமே இலங்கை மத்திய வங்கி ஒழுங்குமுறைப்படுத்தி வருகின்றது. அந்த நிறுவனங்களைப் பொறுத்தவரையில் அரசாங்கம் 35 சதவீத வட்டிவீத உச்ச வரம்பை

நிர்ணயித்துள்ளது. எவ்வாறிருப்பினும், நுண் கடனளிப்புக்களில் கணிசமான ஒரு பாகம் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத கடனளிப்பு நிறுவனங்களினாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த நிறுவனங்கள் அவை அறவிடக்கூடிய வட்டி விகிதங்கள் தொடர்பாக எத்தகைய வரையறைகளையும் கொண்டிருக்கவில்லை. (இலாப நோக்கினால் உந்தப்படும்) தனியார் நிதி நிறுவனங்கள் கடன்களைத் திணிக்கும் விடயத்திலும், நிதிகளை வேகமாக பகிர்ந்தளிக்கும் விடயத்திலும் மிகவும் முனைப்பான விதத்தில் ஈடுபட்டுவரும் நிறுவனங்களாக இருந்து வருகின்றன. 6ஆம் இலக்க நுண் நிதி சட்டம் 2016ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டதுடன், அது நுண் நிதி வணிகச் செயற்பாடுகளை முன்னெடுத்துக் செல்வதற்கு உரிமத்தினை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவையை அவசியப்படுத்துகின்றது. ஆனால், இச்சட்டம் அமுல் செய்யப்பட்டிருக்கவில்லை.

வறட்சியினால் பாதிக்கப்பட்ட நாட்டின் ஒரு சில பிரதேசங்களில் வாழ்ந்து வரும் பெண்கள் பெற்றுக்கொண்டிருக்கும் நுண் நிதிக் கடன்களை – அக்கடன்கள் ரூபா 100,000 இலட்சத்திற்கு மேற்படாதவையாக இருந்துவரும் நிலையிலும், ஆகக்குறைந்தது 3 மாதங்கள் கடன் தவணைக் கட்டணங்கள் நிலுவையில் இருந்து வரும் நிலையிலும் - அவற்றை பதிவழிப்பதற்கென அரசாங்கம் அமுல் செய்துவரும் நிகழ்ச்சித்திட்டத்தை நான் வரவேற்கின்றேன். எவ்வாறிருப்பினும், இங்கிருக்கும் பிரச்சினைகளில் ஒன்று கடன் வாங்கியிருப்பவர்களின் மீது கடன் கொடுத்திருப்பவர்கள் ஏற்படுத்தக்கூடிய அழுத்தத்தின் பின்னணியில், கடன் சேகரிப்பவர்கள் வழமையாக தவணைக் கட்டணங்களில் நீண்ட கால தாமதங்கள் ஏற்படுவதனை அனுமதிப்பதில்லை. எனவே, மிகவும் பலவீனமான பெண்களையும் உள்ளடக்கிய விதத்தில் பெருந்தொகையான பெண்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிவாரணம் பெற முடியாதிருக்கும். அது தவிர, மேலே விபரிக்கப்பட்ட நுண் நிதி கடனளிப்பு நடைமுறைகள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட துஷ்பிரயோகங்கள் என்பன குறிப்பிட்ட அந்தப் பிராந்தியங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டவையாக இருந்து வரவில்லை.

சந்தைப் பொருளாதாரங்களில் கடன் வழங்குபவர்கள் தாங்கள் ஏற்றுக்கொள்ளும் இடர்களுக்கு தாமே பொறுப்பாக இருந்து வருதல் வேண்டும். அவ்வாறில்லாவிட்டால், தமது செயற்பாடுகளின் போது அவர்கள் அறவிடும் வட்டி விகிதங்கள் எவ்வாறிருந்த போதிலும், முழுமையாக அக்கடன்கள் திருப்பிச் செலுத்தப்பட்டால் பாராதூரமான தார்மீக நெறிமுறைகள் தொடர்பான பிரச்சினைகள் உருவாக்கப்படுகின்றன (இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பல சம்பவங்களில் அவை தாராளமான கடன் இடர்காப்புறுதியைக் கொண்டிருப்பது போல் தெரிகின்றது). யதார்த்தத்தில் நடந்திருப்பது இதுவாகும்: கடன்களை மீளச் செலுத்தும் ஆற்றல் இல்லாத ஆயிரக்கணக்கான பெண்மணிகளுக்கு நியாயமற்ற விதத்தில் உயர் வட்டி விகிதங்களில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலவரம் வணிகம் மற்றும் மனித உரிமைகள் என்பன தொடர்பாகவும், அதேபோல நிதித்துறை தொடர்பாகவும் - அதாவது, உத்தியோகபூர்வமாக அவை தம்மை பதிவுசெய்து கொண்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் -நிதித்துறை வணிகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் அனைத்து வகைகளையும் சேர்ந்த நிறுவனங்களையும், அமைப்புக்களையும் உள்ளடக்கிய விதத்தில் தேசிய செயற்திட்டம் ஒன்றை ஸ்தாபிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

நுண் நிதி கடனளிப்பு வணிகத்துறையில் செயற்பட்டுவரும் அனைத்து நிறுவனங்களுக்கும், தனிப்பட்ட கடனளிப்பு நபர்களுக்கும் வட்டி வீத உச்ச வரம்பொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கின்றேன். மேலும், நுண்நிதி கடனளிப்பு நிறுவனங்கள், தமது கடன்களின் இடர்களை மதிப்பிடுவது எவ்வாறு என்பது குறித்த வழிகாட்டுதல்களையும் உள்ளடக்கிய விதத்தில் வலுவான, கண்டிப்பான ஒழுங்குவிதிகளை வினைத்திறன் மிக்க விதத்தில் அமுலாக்க வேண்டும் என்றும், அத்தகைய கடனளிப்பு நிறுவனங்கள் கடன்களை அறவிட்டுக் கொள்வதற்கென மேற்கொள்ளும் செயற்பாடுகளை சர்வதேச மனித உரிமைகள் தரநியமங்களுடன் இணைந்த விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்தி, கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் நான் அரசாங்கத்திடம் வலிந்து கேட்டுக்கொள்கின்றேன்.அதிக வட்டியுடன் கூடிய நுண் நிதிக் கடன்கள் செல்லுபடியற்றவை என்றும் (அல்லது அவற்றை செல்லுபடி அற்றவையாக்க முடியும் என்றும்), நட்டஈட்டுவடிவில் அப்பணத்தைத் திரும்பக் கோரும் உரிமையைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க முடியும் என்றும் சட்டம் உருவாக்கப்படுதல் வேண்டும். இச்சட்டவாக்கம் நிறைவேற்றப்படும் வரையில் மிகவும் பலவீனமான குழுக்களைக் - குறிப்பாக கடனளிப்பு நிறுவனங்களினால் சுரண்டப்பட்டு, துஷ்பிரயோகம் செய்யப்படும் பெண்களைப் –

பாதுகாத்துக் கொள்வதெற்கென கடன் தவணைக் கட்டணங்களை அறவிடுவதனை இடைநிறுத்தும் ஒரு பிரகடனத்தை மேற்கொள்ள வேண்டுமென நான் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன்.

உண்மையிலேயே இக்கடன்களை எடுப்பவர்கள் நிதிசார் தேவைகளைக் கொண்டுள்ளார்கள் என்ற விடயம் தெளிவாகும். இது அரசின் பொறுப்பாக இருந்து வருகின்றது. ஏனெனில், தனியார் நுண் கடன்களுக்கு ஊடாக வறிய மக்கள் பொதுச் சேவைகளுக்குப் பணம் செலுத்த வேண்டுமென நிர்பந்திக்கப்பட முடியாது. மறுபுறத்தில், அரச வங்கிகள் தமது சலுகை நியதியுடன் கூடிய கடன் வசதிகளைப் பெருமளவுக்கு அந்த வசதிகள் தேவைப்படும் ஆட்களுக்குப் பாரியளவில் கிடைக்கக்கூடிய விதத்தில் விரிவாகுதல் வேண்டும் (ஒரு சாதாரண வட்டி விகிதம் கூட வறிய கடன் எடுப்பவர்களைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான ஒரு விருத்தி நிலையை எடுத்துக் காட்ட முடியும்). மறுபுறத்தில், நுண் கடனளிப்பு தொழில்துறையை முழுமையான சமூக பொறுப்புகளுடன் இணைந்த விதத்தில் மேம்படுத்துவதற்கென கூட்டுறவுத்துறை அடிப்படையிலான நிதிசார் முன்னெடுப்புக்களைக் கவனத்தில் எடுப்பதும் பயனுள்ளதாக இருந்து வரும். இதன் காரணமாகவே தேவைகளைக் கொண்டிருப்பவர்களுக்குக் கடன்களை வழங்குவதற்கென வடக்கில் அரசாங்கம் துவக்கி வைத்திருக்கும் முன்னோடி கூட்டுறவு நிதி வசதித்திட்டத்தை நான் வரவேற்கின்றேன். நியாயமான வட்டி விகிதங்களை அறவிடுவதன் மூலம் இந்த நிகழ்ச்சித்திட்டம் செயற்படுகின்றது. இந்த திட்டம் நாட்டின் அனைத்துப் பிராந்தியங்களுக்கும் விரிவாக்கப்பட வேண்டுமென நான் பரிந்துரை செய்கின்றேன்.

நுண் நிதிக் கடனளிப்புத் துறை தொடர்பாக எடுத்து விளக்கப்பட்டிருக்கும் மிகவும் பாரதூரமான நிலைமை, இலங்கையில் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளின் சட்ட அந்தஸ்து தொடர்பான ஒரு கலந்துரையாடல் பொருத்தமானதாகவும், காலத்துக்கு உகந்ததாகவும் இருந்து வருகின்றது என்பதனை எடுத்துக் காட்டுகிறது. மிகவும் நிர்க்கதியான நிலையில் இருந்து வரும் கடன் வாங்கிய கடனாளி ஒருவர் (''உடன்படிக்கைகள் (அல்லது வாக்குறுதிகள்) நிறைவேற்றப்பட வேண்டும்'') என்ற கோட்பாடு, உணவு மற்றும் போதிய வீட்டு வசதிக்கான உரிமை போன்ற தனது பொருளாதார மற்றும் சமூக உரிமைகளுடன் இணக்கப்படுத்தல் வேண்டுமெனக் கோரி நீதிமன்றத்தில் / அல்லது தேசிய மனித உரிமை ஆணைக்குழுவில் ஒரு வேண்டுகோளை முன்வைத்தால், இலங்கையில் இத்தகைய வழக்கு ஒன்று எவ்வாறு தீர்த்து வைக்கப்படும்?

பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தை இலங்கை 1980ஆம் ஆண்டில் அத்தாட்சிப்படுத்தியிருக்கும் அதே வேளையில், இந்த உரிமைகள் இதுவரையில் வெளிப்படையான விதத்தில் நாட்டின் அரசியல் யாப்பில் உள்வாங்கப்படவில்லை.இந்த உரிமைகளின் வலுவுக்கிடக்கூடிய தன்மையை ஏற்றுக்கொள்ளும் விடயத்தில் ஓரளவுக்குத் தயக்க நிலை காணப்படுகின்றது என்பதனை இது பிரதிபலிக்கின்றது.

ஒருபுறத்தில், இலங்கை இந்த சமவாயத்தை அத்தாட்சிப்படுத்துவதன் ஊடாக, உரிமை தாரர்கள் தொடர்பாக அந்த உரிமைகள் முழுமையாக வலுவுக்கு இடப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு சட்ட ரீதியான வழிவகைகளை வழங்குவதற்கான கடப்பாட்டினை ஏற்றுக்கொண்டுள்ளது. மறுபுறத்தில், தேசிய நீதிமன்றக் கட்டமைப்பு கல்விக்கான உரிமை போன்ற குறிப்பிட்ட சில பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை வலுவுக்கிட முடியும் என்ற விடயத்தை ஏற்கனவே ஏற்றுக்கொண்டுள்ளது. அனைத்து பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளும் அவற்றை நியாயப்படுத்தக் கூடிய தன்மையையும் உள்ளடக்கிய விதத்தில் தேசிய சட்டத்தொகுப்பில் உள்வாங்கப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு அரசியல் யாப்பு சீர்த்திருத்தச் செயன்முறைக்கு அரசாங்கம் ஆதரவளிக்க வேண்டும் என நான் ஆலோசனை வழங்குகின்றேன்.மேலும், நாட்டின் பொருளாதார, சமூக உரிமைகள் தொடர்பாக முடிவுகளை மேற்கொள்ளும் பொழுது இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான சட்ட ரீதியான சர்வதேச கடப்பாடுகளைக் கவனத்தில் எடுக்கவேண்டுமென நீதிமன்றங்களிடம் பரிந்துரை செய்கின்றேன்.

*விஜயம் குறித்த தகவல்கள்*

வெளி விவகார அமைச்சர், நிதியமைச்சர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர் ஆகியோருடனும், அபிவிருத்தி உத்திகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு, சமூக வலுவூட்டல் அமைச்சு, நலநோம்பல் மற்றும் ஆரம்ப கைத்தொழில்கள் அமைச்சு, நீதியமைச்சு மற்றும் தொழில் மற்றும் தொழிற்சங்க விவகாரங்கள் அமைச்சு, சட்டம் ஒழுங்கு அமைச்சு, பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சு, சுகாதார, போஷாக்கு மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சு, தேசிய ஒருங்கிணைப்பு, நல்லிணக்கம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய தரப்புக்களுடனும் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களிலிருந்து நான் பயனடைந்துள்ளேன். அது தவிர கணக்காய்வாளர் நாயகம், சட்டமா அதிபர், இங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் நல்லிணக்க பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகத்தின் செயலாளர் நாயகம் ஆகியோரையும் நான் சந்தித்தேன்.

நிதிப் புலனாய்வு பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளையும், அதேபோல இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரிகளையும், பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவுத் துறை அதிகாரிகளையும் நான் சந்தித்தேன்.

பாராளுமன்ற உறுப்பினர்கள், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, கூட்டுறவு முகவர்கள், தனியார் வங்கிகள் மற்றும் கடனளிப்பு சங்கங்கள் என்பவற்றின் பிரதிநிதிகள், அதேபோல சிவில் சமூகம், தொழிற்சங்கங்கள் என்பவற்றின் பிரதிநிதிகள், கல்விமான்கள் ஆகியோருடனான சந்திப்புக்களும் எனது நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. கட்டுநாயக்காவுக்கு விஜயம் செய்யக் கூடிய வாய்ப்பும் எனக்கு கிடைத்தது.

என்னை சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கியமைக்காகவும், திறந்த, வெளிப்படையான உரையாடலில் என்னுடன் பங்கேற்றமைக்காகவும் அந்தந்த நிறுவனங்களைப் பிரதிநிதித்துவம் செய்த அனைத்து பிரதிநிதிகளுக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.